Arimā Nōkku

# அரிமா நோக்கு

3:1 ஏப்பிரல் 2009

ரூ.20

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா
நோக்கு
3:1 ஏப்பிரல் 2009

லாரன்சு உர்தாங்கு
- வ. ஜெயதேவன் 03

சொல்லின்றிச் சொல்வது
- சா. கந்தசாமி 04

புதையலைத் தேடி
- அ. ச. ஞானசம்பந்தன் 05

இராமாநுச கவிராயரின் நன்னூல் விருத்தியுரை
- பா. மதுகேஸ்வரன் 16

WHO IS HE?
- A. Kamatchinathan 19

திணை : சொல்லும் பொருளும்
- ரா. செயராமன் 22

மேலாண்மை பொன்னுச்சாமியின் மின்சாரப்பூ: பாடுபொருள் சிறப்பும் அணி அழகும் மொழி நடையின் பண்பும் - கி. நாச்சிமுத்து 31

LANGUAGE CONTACT AMONG TANGSAS IN CHANGLANG DISTRICT OF ARUNACHAL PRADESH
- Mathew Thomas & S. Meenakshisundaram 34

செய்யூஉ வாய்பாட்டு வினைகள்
- இரா. கோதண்டராமன் 37

தொல்காப்பிய இலக்கண மரபும் வடநூல் வழித் தமிழாசிரியர் கூட்டமும் நேமிநாதத்தின் வழி ஒரு கண்ணோட்டம்
- இரா, இலக்குவன் 40

ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் இலக்கியப்பணி
- ம. திருமலை 60

தமிழன்பன் கவிதைகளில் அரசியல் அங்கத உத்திகள்
- பி. கோகிலாதேவி 68

நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள்

படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும், மாற்றவும் பதிப்பாளருக்கு உரிமை உண்டு. முன்இசைவின்றி இவ்விதழிலிருந்து எதனையும் எடுத்தாளலாகாது.

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## தமிழ் நாட்டில் சாகித்திய அகாதெமி?

இந்திய மொழிகளின் பெருமைமிகு நிறுவனமாகப் புதுதில்லியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் சாகித்திய அகாதெமி இந்தியாவின் முதல் தலைமையமைச்சர் சவகர்லால் நேருவின் ஆசைக் கனவொன்றின் அழகிய வெளிப்பாடு எனலாம். இருபத்திரண்டு இந்திய மொழிகளின் தலைசிறந்த படைப்புக்களை ஒவ்வோர் ஆண்டும் தெரிவுசெய்து பரிசு தந்து பாராட்டித் தேசிய அளவிலான மதிப்புக்கு உரியவராக அப்படைப்பாளியைச் சுட்டிக்காட்டி வருகிறது அது. நான்கு ஆண்டுகளுக்கு முன் போதோ, சாந்தாளி ஆகிய இரு மொழிகளும் அகாதெமியின் ஏற்புக்கு உள்ளாகி ஏனைய 22 மொழிகளோடு இணைந்துள்ளன. படைப்புப் பரிசுகள், மொழிபெயர்ப்புப் பரிசுகள் தவிரவும் பன்முகச் செயல்பாடுகளைத் திட்டமிட்டு நிறைவேற்றி மொழி விழுமியங்கள் கடந்து, வரலாறு, பண்பாடு, கலை, உறவு ஊடாட்டங்கள் என ஒளி படைத்த பணிகளால் ஒப்பற்று விளங்கி வருகிற இந் நிறுவனத்தின் தென் மண்டல மையம் சென்னையில் இயங்கிவந்தது. சாகித்திய அகாதெமியின் மொழிபெயர்ப்பு மையம் கர்நாடகத்தின் பெங்களூருவில் தொடங்கப்பெற்று இன்றுவரை அங்கு இயங்கிவருகிறது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளுக்கு உரிய தென் மண்டல மையம் 1990 இல் சென்னையிலிருந்து பெங்களூருவுக்கு மாற்றப்பட்டு, புத்தக விற்பனையோடு சிறுசிறு அலுவல்களைக் கவனிக்கும் ஒரு சின்னஞ்சிறிய கிளை மட்டும் சென்னையில் விட்டுவைக்கப்பட்டது. பின்னர் அக்கிளை அலுவலகத்துக்கு 'வாடகை கட்ட இயல்வில்லை; தமிழக அரசு உதவினால் அதைச் சென்னையில் நீட்டிப்பது பற்றி நினைக்கலாம்' என்று சாகித்திய அகாதெமியின் பொதுப் பேரவை உறுப்பினராக நான் இருந்தபோது, அப்போதைய தலைவர் இரமாகாந்த்ராத் கூறினார். தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆதரவால் தரமணியில் முதலில் ஐந்து அறைகளும், பிறகு மேலும் ஓர் ஐந்து அறைகளும் வாடகை இல்லாமல், சாகித்திய அகாதெமியின் கிளையைச் சென்னையில் தக்கவைத்துக் கொள்ள முடிந்தது.

தரமணியில் கிளை அலுவலகத் தொடக்க விழாவிற்கு (கி.பி. 2000) சாகித்திய அகாதெமியின் அன்றைய செயலர் கே. சச்சிதானந்தன் வந்திருந்தபோது, தென் மண்டல மையத்தைத் திரும்பவும் சென்னைக்கே கொணர்வது பற்றிய கருத்து எழுந்தது. கர்நாடகத்திற்கு அதனைக் கொண்டுபோகாமல் முதலிலேயே ஆவன செய்திருக்க வேண்டும். இனி அதனை அப்படியே தமிழகத்திற்குக் கொணர்வது அவ்வளவு எளிதில்லை என்று பேசிய சச்சிதானந்தன், தமிழக அரசு வாடகையின்றிப் பத்து அறைகளை அகாதெமியின் பயன்பாட்டிற்கு வழங்கியதற்கு நன்றி தெரிவித்துப் பாராட்டியதோடு, இனித் தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளுக்கு உரியதாகவேனும் செயற்பாட்டுத் தன்னாட்சி நிறுவனமாகச் சென்னைக் கிளையை மாற்றி அமைப்பதில் சிக்கல் ஏதும் இல்லை என்றார்; விரைவில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் உறுதியளித்தார். ஆயின், இன்றுவரை சென்னைக் கிளைக்கு அத்தகைய பரிமாணத்தை உருவாக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

தமிழகத்தின், புதுவை மாநிலத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சாகித்திய அகாதெமியின் பொதுப் பேரவையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் இதுகுறித்துப் போதிய கவனம் செலுத்தினால் இம்முயற்சி வெற்றி பெறலாம்.

தமிழ் மொழியின் செம்மொழித் தகுதி நடுவண் அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு, ஆணைவழி ஏற்பு நிகழ்ந்து அதற்கு உரிய நிறுவனம் சென்னையில் அமைந்து இயங்கிவரும் இன்றைய சூழலில் - முழுமையாகச் சாகித்திய அகாதெமியின் தென் மண்டல அலுவலகத்தைத் திரும்பவும் பெற முடியாமல் போயினும் அதன் செயலர் அன்றைக்கு அளித்த உறுதிமொழியின்படி, சென்னைக் கிளையைத் தமிழ், மலையாள மொழிகளுக்கான தன்னாட்சி நிறுவனமாக ஆக்கவும், கூடவே ஒரு மொழிபெயர்ப்பு மையத்தைப் பெறவும் செய்வதற்கு உரியவை எவையோ அவற்றை உரியவர்கள் செய்து முடிப்பது தமிழன்னையின் தங்க மகுடத்தில் மேலும் இரண்டு வைர மணிகளைப் பதிப்பதாக அமையும். •

**இவ்விதழின் முகப்பு அட்டையை அணிசெய்யும் குறிஞ்சி மலர்கள் உடைய ஒளிப்படத்தை அளித்த முனைவர் அ. காமாட்சிநாதன் (அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற மொழியியல் பேராசிரியர்) அவர்களுக்கு இதயங்கனிந்த நன்றி.**

- *அரிமா நோக்கு*

**அரிமா நோக்கு இதழ் மூன்றாம் ஆண்டில் அடி எடுத்துவைக்கிறது. ஆதரவு அளித்துவரும் பெரும் புரவலர்கள், புரவலர்கள், வாழ்நாள் மற்றும் பிற உறுப்பினர்கள், விளம்பரதாரர்கள், நிறுவனத்தார், அரசு நூலகத்தார் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.**

- *அரிமா நோக்கு*


*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர் (மதிப்புறு நிலை)*
வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*
சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும்
அயல் நாடுகளிலும் உள்ள
தமிழியல் அறிஞர்கள்,
பல்கலைக்கழகப்
பேராசிரியர்கள்
மற்றும்
படைப்பாளிகள்

*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

*துணைப் பதிப்பாளர்*
'விழிகள்' தி. நடராசன்


# கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/- | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |

நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) ரூ. 10,000/ $ 500

- நிறுவனம் சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*


## அரிமா நோக்கு

4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www.arimaanokku.com மின் அஞ்சல்: arimaa.nokku@gmail.com செல்: 9380626448